# விவாஹ மந்திர விளக்கங்கள்.

## ( சுருக்கம் )

### முன்னுரை.

விவாஹம் என்பது ஒரு ஸம்ஸ்காரம் ஒரு பொருளைத் தூய்மை படுத்துவது என்பதே ஸம்ஸ்காரம் எனப்படும். தங்கத்தை எப்படித்தூய்மைபடுத்தியப் பின்பே பயன்படுத்துகின்றோமோ, அது போன்றே நம் தேகத்தையும் தூய்மை படுத்திக்கொள்வது என்பது மிகமிக முக்யமானது ஏனென்றால் நமது தேகம், கர்பவாஸம், ப்ரக்ருதி ஸம்பந்தத்தாலும் ஆகாரத்தாலும் தோஷமடைகின்றது இவைகள் நீங்கி நாம் ஆன்மிக ஞானம் பெருவதற்கே ஜாதகர்மம் நாமகர்ணம், அன்னப்ராசனம், சௌளம், உபநயனம், விவாஹம், பஞ்ச மஹாயக்ஞங்கள் ஆகியவைகள் ஸம்ஸ்காரங்களாக நமக்கு ஏற்படுத்தப் பட்டு இருக்கின்றன.

ஸம்ஸ்காரங்கள் மொத்தம் நாற்பது என்பர் இவற்றுள் 26ஐ விவாஹத்திற்குப்பின்பே ஒரு புருஷன் தன் பத்னியுடன் சேர்ந்து செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டு இருக்கின்றது இவை மூன்று வர்ணத்தினற்கும் அக்னி சாட்சியாகச் செய்யப்படுபவையாகும் விவாஹம் ஆன பிறகு ஒருவன் க்ருஹஸ்தாச்ரமத்தை ஏற்கிறான் எனவே இது தம்பதிகளுக்குள் மாற்ற இயலாத சம்பந்தத்தை ஏற்படுத்துகின்றது பெண்களுக்கு விவாஹமே முக்ய ஸம்ஸ்காரமாகும். இது அவர்களுக்கு உபநயன ஸ்தானத்தில் விதிக்கப்பட்ட ஒரு ஸம்ஸ்காரமாகும்.

ஒருமனிதன் பிறக்கின்ற போதே ரிஷிகள், தேவர்கள், பித்ருக்கள், மனிதர்கள் என்ற நால்வருக்கும் கடன் பட்டு இருக்கிறார்கள் என்று வேதத்தில் கூறப்பட்டுள்ளது. இவற்றில் ரிஷிகளுக்குப் பட்டகடன் அத்யயனம் செய்வதன் மூலமும், யக்ஞங்களால் தேவர்களுக்குப்பட்ட கடன்களும் நல்ல குழந்தைகளைப்பெறுவதால் பித்ருக்களுக்குப்பட்ட கடன்களும் அதிதிகளை உபசரிப்பதால் மனிதர்களுக்குப் பட்ட கடன்களும் அடைகின்றன என்று கூறப்பட்டு இருக்கின்றது. தேவ, பித்ரு, மனுஷ்ய கடமைகளைச்செய்ய இன்றியமையாத க்ருஹஸ்தாஸ்ரம தர்மத்திற்கு முக்யமான ஸம்ஸ்காரமே விவாஹமாகும் அதனால்தான் " தர்மப்ரஜார்த்தம் வ்ருணீமஹே "என்று விவாஹத்தின் தொடக்கத்தில் கூறப்படுகின்றது இதன் பொருள் யக்ஞம் முதலிய தர்மங்களைச்செய்யவும் தர்ம மார்கத்தில் ஸந்ததிகளைப் பெறவும் இந்த கன்னியை வரிக்கிறேன் என்பதாகும்.

( தொடரும்.......